**ARTICLE 23 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00030**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 128–134
Received: 30 September 2026 • Accepted: 1 October 2026

# நதிக்கரை மீன்கள் காட்டும் பண்பாட்டு வெளிப்பாடுகள்

**இராஜன் ஜான் அ**[1,*]
[1]உதவிப் பேராசிரியர் ,தமிழ்த்துறை ,ஜெ.பீ.கலை மற்றும் அறிவியல் கல்லூரி தென்காசி ., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** இராஜன் ஜான் அ — rajanjohn315@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

பண்பட்ட மனிதர்களின் வாய்ச் சொற்கள் கதைகளாக மாறின. அந்தக் கதைகளின் வாயிலாக ஒரு குறிப்பிட்ட பகுதியின் சமூக நிலை, கலாச்சாரங்கள், பேச்சு வழக்கு, இவை போன்ற பண்பாட்டுக் கூறுகளை நாம் அறிந்து கொள்ள முடியும். அவ்வகையில், திருநெல்வேலி பகுதியில் வசிக்கும் பேட்டை வணிக வைசிய அரசு தொடக்கப்பள்ளியின் ஆசிரியரும் தமிழ்நாடு அரசின் தூய தமிழ்ப் பற்றாளர் விருது பெற்ற வாழும் படைப்பாளருமான திரு. வ. செல்வ மாரிமுத்து அவர்களின் நதிக்கரை மீன்கள் என்ற கதைத்தொகுதி பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைத் தனக்குள் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. இக்கதைத் தொகுதியில் கூறப்பட்டுள்ள பண்பாட்டு வெளிப்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதே கட்டுரையின் நோக்கமாக இருக்கிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** கதைத்தல்; கருதுகோள்; விழுமியம்; பட்டறிவு

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** அ, இ. ஜா. (2026). நதிக்கரை மீன்கள் காட்டும் பண்பாட்டு வெளிப்பாடுகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

மக்கள், தங்களுடைய வாழ்வியலை முறைப்படுத்திக் கொள்வதற்கு முன்பு அவர்களுக்குப் பல்வேறு அனுபவங்கள் கிடைத்தன. இந்தப் பட்டறிவுகளைக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையை அவர்கள் சீர்படுத்திக் கொள்ளத் தொடங்கினார்கள். இந்தப் பட்டறிவு, ‘பண்பாடு’ ஆகும். பண்பாடுகள், எழுதப்படாத வாய்மொழி வாயிலாக மக்களுக்குள் கதைகளாகக் கூறப்பட்டன. கதைகள், எளிமையாக மக்களுக்குப் புரிந்த காரணத்தினால் கலாச்சாரப் பண்பாடுகள் இவற்றின் வாயிலாக அனைவரிடமும் மிக வேகமாகப் பரவின. எனவே, படைப்பாளர்கள் தற்போது கதைகளின் வாயிலாகப் பண்பாடு தொடர்பான கருத்துக்களைப் பதிவு செய்து வருகிறார்கள். அவ்வகையில் நதிக்கரை மீன்கள் என்ற கதைத் தொகுதியில் சில பண்பாட்டுக் கூறுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## கதை - சொல் விளக்கம்

‘கதைத்தல்’ என்பது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு செயல்பாடு ஆகும். **“செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்”** என்பார் வள்ளுவர். அவ்வகையில், காதுகளால் கேட்டு, மனதிற்குள் நிறுத்தி, அதனை மீண்டும் வாழ்வில் பயன்படுத்த கதைகள் உந்து சக்தியாக இருக்கின்றன. சிறியோர் முதல் பெரியோர் வரை கதை

சொல்வதற்கும் கேட்பதற்கும் ஆர்வம் கொண்டவர்கள் இருக்கிறார்கள். எழுதப் படிக்கத் தெரியாத நபர்களுக்குக் கூட கதைகளின் வாயிலாக சிறந்த கருத்துக்களைப் புரிய வைக்க முடியும்.

## பண்பாடு

வாழ்வியல்,பழக்கவழக்கம்,நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள்,சொல்லாடல்கள் என இவற்றின் தொகுப்பே பண்பாடு.தனிமனிதனுடைய வாழும் முறையிலிருந்து அவனுடைய பண்பாட்டை அறிந்து கொள்ள முடியும்.சில பண்பாடுகள் காலப்போக்கில் அழிந்துவிடுபவை. ஆனால், சில பண்பாட்டுகள் காலத்துக்கு ஏற்ப, தன்னை மாற்றிக்கொண்டு தொடர்ந்து பயணிக்கக்கூடியவை. **“ஒருவன் தன் குணங்களை நிரப்புவதிலும் சமுதாயத்தின் நலங்களைப் பேணுவதிலும் பேரவாக் கொண்டிருக்கும் பக்குவ நிலையே ஆகும்.”** என்ற வையாபுரிப்பிள்ளை அவர்களின் கருத்தின் வாயிலாகப் பண்பாடு பற்றிய விளக்கத்தை அறியமுடிகின்றது.

## வழிபாடு

வழிபாடு என்பது முன்னோர்கள் வகுத்துக் கொடுத்த வழியில் நடப்பது. ‘வழிப்படுத்துதல்’ என்ற பொருளில் அமைகிறது .ஒரு குறிப்பிட்ட தெய்வத்தை எந்த முறையில் வணங்க வேண்டும் என்ற விதிமுறைகளுக்கு வழிபாடு என்று பெயர். வழிபாட்டு நிகழ்வுகளின் வாயிலாக ஒரு குறிப்பிட்ட பகுதியின் கலாச்சார பண்பாடுகள் பற்றி நாம் அறிந்து கொள்ளலாம். **“விரையும் உள்ளுணா விற்கு ஏதாவதொன்று வேண்டுமன்றே ? பொருந்தியது எது ? வழிபாடு, வழிபடுதல் வழிபாடு, உளளுணாவு வளர்ச்சிக்கு வழிபாடு ஒளி போன்றது.”** என்ற இந்தக் கருத்தின் வாயிலாக மனிதனுடைய உள்ளார்ந்த சிந்தனைகளின் வெளிப்பாட்டைக் காட்டுவதே வழிபாடு என்று அறிந்து கொள்ள முடிகிறது. உள்ளார்ந்த சிந்தனைகள் செயல்களாக வெளிப்படும்போது அவையே பண்பாடாக மாறுகின்றது.

## திருமண வாழ்வியல்

திருமணம் என்பது ஒவ்வொரு மனித வாழ்விலும் திருப்பு முனையாக இருக்கும் ஒரு பண்பாடு சார்ந்த நிகழ்வாகும்.குறிப்பிட்ட எந்த விதிமுறையும் இல்லாமல் மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டிருந்த பண்பாடற்ற மனித இனத்துக்கு வழிகாட்டும் ஒரு கலாச்சார நிகழ்வே திருமணம் ஆகும். **“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப”**என்ற தொல்காப்பியரின் விளக்கத்தின் படி, பண்பாட்டு மீறல்கள் நடந்த பிறகே திருமணம் என்பது கொண்டுவரப்பட்டது என்பதை அறிய முடிகிறது.நதிக்கரை மீன்கள் என்ற கதைத் தொகுப்பில் பொருத்தமான தேர்வு என்ற தலைப்பிலான கதையில், திருமணம் என்பது எவ்வாறு நிச்சயிக்கப்படுகிறது.

திருமணம் என்பது கண் பார்வையால் மட்டும் புரிந்து கொண்டு வாழ்க்கை தொடங்கும் வாழ்வியல் முறை அல்ல. ஒருவருடைய மனதின் ஆழங்களைப் புரிந்து கொண்டு அதற்கு ஏற்றார் போல அமைத்துக் கொள்ளக்கூடிய வாழ்வியல். திருமண உறவுகளுக்குள் பண்பாட்டு ரீதியான சூழல்கள் உருவாகி அந்தப் பிணைப்பு சிறப்பாக இருக்க வேண்டும். ஆனால், சரியான நபரைத் தேர்வு செய்யாமல் திருமணங்கள் பண்பாட்டில்

இருந்து விலகி ரத்து செய்யப்படும் அளவிற்குச் செல்லக்கூடிய சூழல்கள் ஏற்படுகின்றன என்பதை ஆசிரியர் பொருத்தமான தேர்வு என்ற கதையின் வாயிலாக விளக்குகிறார். “**அழகான தோற்றம் மற்றும் பாரம்பரியமான ஆடை அணிந்திருக்கும் பெண் நல்ல குணம் கொண்டவர்களாக இருப்பாள் என்று நான் நம்பினேன் ஆனால் அவள் அப்படி இல்லை நீ காதலித்து என்னிடம் அறிமுகம் செய்த பெண் நவநாகரீக ஆடை அணிந்திருந்த காரணத்தினால் அவளை நான் குடும்பத்திற்கு ஒத்து வராதவள் என்று கூறி ஒதுக்கி விட்டேனே இப்பொழுது என் மகனின் உன் வாழ்க்கை இவ்வாறு ஆகிவிட்டது”** என்று சூர்யாவின் தாய் அவனிடம் புலம்புவதில் இருந்து இதனை அறிந்து கொள்ள முடிகிறது.

## கலப்புத்திருமண பண்பாடு

திருமணம் என்பது மனிதனை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் இருக்க வைக்கும் கட்டுப்பாடுகள் நிறைந்த ஒரு செயல்பாடாகும்.திருமணத்தால் மனிதனின் வாழ்வு கட்டுக்குள் கொண்டுவரப்படுவது சரியே.ஆனால், திருமணமே ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுவது தவறு என்பது ஆசிரியரின் கருத்தாக இருந்துள்ளது.அனைத்துப்பகுதிகளிலும் பெரும்பாலான கௌரவக் கொலைகள் நடைபெறுகின்றன.ஆனால்,கலப்புத்திருமணத்தை ஆதரிக்கும் பண்பாடும் தென்மாவட்டப்பகுதிகளில் முன்பு இருந்துள்ளதை மனம் மாறியது என்ற கதையின் வாயிலாக ஆசிரியர் விளக்குகின்றார்.

முதலியார் சாதியைச் சார்ந்த ஒருவரின் மக்கள் வேறு ஜாதி ஆண்மகனைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறாள்.இதனால் கோபமடைந்த முதலியார் அவளை வீட்டைவிட்டு விரட்டுகின்றார்.அப்பெண் தன்னுடைய கணவனோடு அதே ஊரில் வசித்து வருகிறாள். பெரிய நல்ல நாள் ஒன்றில் முதலியார் தன்வீட்டில் ஊரையே அழைத்து விருந்து வைத்து மகிழ்ச்சியடைகின்றார்.ஆனால்,ஊர்மக்கள் மற்றும் உறவினர்கள் அவருடைய மகளை ஒதுக்கி வைத்துவிட்டு இவ்வாறு கொண்டாடுவது தவறு என்று எடுத்துரைக்கின்றார்கள்.இதனை, "**உனக்கு தகப்பன் இஸ்தானத்திலிருந்து காயத்ரி உபதேசம் பண்ணினவன் நான்தானே.நானே சொல்றேன் .சாதி என்னடா சாதி…நாளைக்கே நீயும் நானும் செத்துப் போனா ஒடம்ப எரிக்கப்போறது நம்மவா இல்ல.வெட்டியான் தான்.நீ என் சாதி இல்ல .அதனால என் உடம்ப தொடக்கூடாதுனு சொல்லமுடியுமா? வயசாளி நானே இத பெருசா எடுத்துக்கல.**"என்று வயதான ஒரு பெரியவர் கதாப்பாத்திரத்தின் வாயிலாக ஆசிரியர் விளக்குகின்றார்.

## நம்பிக்கையும் மூடநம்பிக்கையும்

நம்பிக்கைகள்,என்பவை உளவியல் தொடர்புடையவையாகும்.ஒரு குறிப்பிட்ட கருதுகோள் பெயரில் அதன்மேல் வைக்கும் பற்று நம்பிக்கை எனப்படுகின்றது. இந்த நம்பிக்கைகள் மனிதனின் பண்பாட்டை விளக்குகின்றன.ஒவ்வொரு பகுதியில் வாழும் மக்களின் நம்பிக்கைகள் அவர்களின் பண்பாட்டுக்கு ஏற்ப மாறுபடுகின்றன.பாம்புகளைக் கடவுளாக வணங்கும் பண்பாடு கொண்டவர்களாக நம்மில் பலர் இருக்கின்றார்கள்.ஆனால்,அதே பாம்புகள் சில நாட்டவர்களால் உணவாக

உண்ணப்படுகின்றது.இதிலிருந்து ஒரு குறிப்பிட்ட செயலைக்கொண்டு அது இருக்கும் இடத்தின் பண்பாட்டு முறையை அறியமுடிகின்றது.

**சில நம்பிக்கைகள் நம் அறிவு வளர்ச்சிக்கு ஒவ்வாதவையாக இருக்கலாம்.ஒருவர் வாழுகின்ற சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்குப் பொருந்தாத பொருளற்ற நம்பிக்கைகளையும் சடங்குகளையும் மூட நம்பிக்கைகள் என்பர்**" என்ற வரிகளின் வாயிலாக மூடநம்பிக்கைகள் பற்றிய விளக்கத்தை அறியமுடிகின்றது.மேலும், **“சோதிட நம்பிக்கை என்பது தமிழ்நாட்டுப் பெண்களிடம் அழுத்தமாகப் பதிவாகி விட்ட ஒன்று. இந்நிலையில் நாவல் களில் வரும் பெண்மாந்தர்களில் சிலர் சோதிட எதிர்ப்பு உணர்வு உள்ளவர்களாக மு.வ. படைத்துக் காட்டுவது மிகுந்த கவனத் திற்கு உரியதாக அமைகின்றது.**” என்ற வரிகளில் பெண்கள் சோதிடம்,சாஸ்திரம் போன்ற மூடநம்பிக்கைகளுக்கு அடிமையாகி இருப்பதை மு.வரதராசனார் சுட்டிக்காட்டுவதிலிருந்து அறியமுடிகிறது.

இதே மூட நம்பிக்கை நதிக்கரை மீன்கள் என்ற கதைத்தொகுப்பிலும் ஆசிரியரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.நாளாவது கிழமையாவது என்ற கதைத்தொகுப்பில் வரும் பின்வரும் வரிகளின் வாயிலாகப் பெண்கள் மூட நம்பிக்கையில் மூழ்கி இருந்ததை அறியமுடிகின்றது. "**இன்னைக்கு அம்மாவாசை,அதுவும் ஆடி அமாவாசை.ஆடி மாசம் ஆம்பள பிள்ளை பொறந்தா குடும்பத்தையே ஆட்டி வைப்பான்.நாளைக்கு மூல நட்சத்திரம் வேற வருது.மூல நச்சத்திரத்துல பொம்பள பிள்ளை பிறந்தா மாமனாருக்கும் மாமியாருக்கும் ஆவாது**" என்று சுப்பு என்ற கதைமாந்தர் வாயிலாக ஆசிரியர் பேச வைக்கின்றார்.

## பெரியாரை மதித்தல்

மதிப்பு என்பது பண்பாட்டு விழுமியத்தில் மிகவும் முக்கியமான ஒன்றா வயதில் மூத்த அனுபவம் மிகுந்த நபர்களுக்கு மதிப்பு கொடுத்து பழங்கால மன்னர்கள் போற்றினார்கள் மன்னருக்கு ஆலோசனை வழங்கும் முக்கியமான இடத்தில் ராஜ குருவாக வயது முதிர்ந்த சான்றோர்கள் இருந்துள்ளார்கள்.இதனை, **“வாசனை இல்லாத பூவும், கல்வி அறிவு குணம் இவற்றில் வல்ல பெரியோர் கூடி இல்லாத சபையும்,பூவுலகத்தில் இருந்தம் என்ன பிரயோஜனம்”** என்ற கருத்தின் வாயிலாக அறியமுடிகிறது. இக்கருத்தின் அடிப்படையில் பெரியோர்கள் இல்லாத சபை பயனற்றது என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

மேலும், பெரியோர்களுக்குப் பழங்காலத்தில் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தையும் அது பண்பாட்டின் வாயிலாக எந்த அளவு மக்களோடு இணைந்துள்ளது என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. பதில் உபகாரம் என்ற சிறுகதையில் பெற்று வளர்த்த தன்னுடைய தகப்பனை அவருடைய சொத்துக்களையும் பறித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே விரட்டிய சொந்த மகன் மற்றும் மருமகளின் நிலை விளக்கப்படுகிறது. வயது வேறுபாடு பார்க்காமல் மருமகள் அவரை உதாசீனப்படுத்திப் பேசுவதை ஆசிரியர் இந்தக் கதையில் விளக்கியுள்ளார்.பெரியோர்களை மதிக்க வேண்டும் என்ற பண்பாட்டுச் செயல்பாடு மீறப்பட்டுள்ளது. மேலும், விரட்டப்பட்ட அந்தப் பெரியவர் அருகில் உள்ள ஒரு குப்பத்துக்குச் சென்றிருக்கிறார்.

அங்கு சிவகாமி என்ற ஒரு பெண் அவரைத் தன்னுடைய சொந்தத் தாத்தாவாக நினைத்து அவருக்கு இறுதிவரை உடனிருந்து அனைத்து ஈம காரியங்களைச் செய்ததையும் ஆசிரியர் விளக்கியுள்ளார். ஒரு குறிப்பிட்ட சமூகத்து மனிதர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பெரியோர்களிடம் நடந்து கொள்ளும் வேறுபட்ட பண்பாட்டு முறைகளை இவர் அழகாக விளக்கியுள்ளார். இதனை “**பழைய உணவு கெட்டுப்போன பொருள்கள் போன்றவற்றை என் மருமகள் எனக்கு கொடுக்கிறாள் உரிய நேரத்தில் மாத்திரை தருவதில்லை என் அருகில் வந்தால் என்னிடம் இருக்கும் ஏதேனும் நோய்கள் குழந்தைக்கு பரவி விடும் என்று பேரன் பேத்திகளை என்னிடம் வர அனுமதி கொடுப்பதில்லை**” என்று உயில் அவர் எழுதி வைத்திருப்பதிலிருந்து அறிய முடிகிறது.

## வட்டார வழக்குச் சொற்கள்

சொற்கள் என்பவை ஒரு குறிப்பிட்ட மொழி ஒவ்வொரு பகுதியிலும் எவ்வாறு தன்னை உருவாக்கிக் கொண்டு பேசப்பட்டு வருகிறது என்பதைத் துல்லியமாக வெளிப்படுத்தக் கூடியதாகும். பல்வேறு காலங்கள் பயன்படுத்தப்பட்டு வரும் பல்வேறு விதமான தமிழ்ச் சொற்கள் பண்பாட்டின் தொடர்ச்சியை விளக்குவதாக அமைகின்றன.அவ்வகையில், நதிக்கரை மீன்கள் என்ற இக்கதைத்தொகுப்பிலும் ஆசிரியர் தென்பகுதியில் உள்ள சில பொதுவான வழக்குச்சொற்களைக் கையாண்டுள்ளார்.”**வாட்டசாட்டமான,வயசாளி,அப்பிசி,அப்பாரு,வல்ல ரக்கி ,வழிச்சு நக்கினது”** என இவைபோன்ற வட்டார வழக்குச்சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.இச்சொற்கள் வாயிலாக தென்பகுதி மக்கள் கூற வரும் கருத்துக்களை எளிமையாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

## முடிவுரை

நதிக்கரை மீன்கள் என்ற கதைத்தொகுப்பில்,தென்மாவட்ட மக்களின் பேச்சு,பழக்கவழக்கங்கள்,சோதிட நம்பிக்கைகள்,திருமணம் பற்றிய உளவியல் புரிதல்கள் என அனைத்தும் ஆசிரியரால் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.நெல்லை மற்றும் அதன் சுற்றுவட்டாரப்பகுதிகளில் பரவியுள்ள சொல்லாடல்களை ஆசிரியர் இந்தக் கதைத் தொகுப்பில் பயன்படுத்தியுள்ளார்.இந்தச் சொற்கள் ஆசிரியர் சொல்ல வரும் கருத்துக்களை எளிமையாக மக்களுக்கு விளக்கும் தன்மை கொண்டவையாக இருக்கின்றன.தென்மாவட்ட நெல்லை வாழ் மக்களின் பண்பாடுகள் இந்தக் கதைத்தொகுப்பில் ஒவ்வொரு கதையிலும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. திருக்குறள் எளிய உரை.,மாணவர் மன்றம் சென்னை 12.,முதல் பதிப்பு 1960., ப 104
2. தமிழர் பண்பாடு.,பேரா.வையாபுரிப்பிள்ளை.,தமிழ்ப்புத்தகாலையம் சென்னை 5.,முதல் பதிப்பு 1949.,ப 2
3. உள்ளொளி.,திரு. வி. க.,சாது அச்சுகூடம் ராயப்பேட்டை சென்னை.,முதல் பதிப்பு 1945., ப 69
4. தொல்காப்பியம் பொருளதிகாரம்.,கல்விக்கடல் அச்சுக்கூடம்.,முதல் பதிப்பு 1847.ப 606
5. நதிக்கரை மீன்கள்.,சிவ செல்வ மாரிமுத்து (தமிழ்நாடு அரசின் தூய தமிழ்ப்பற்றாளர் விருதாளர்) ப 12

6. நதிக்கரை மீன்கள்.,சிவ செல்வ மாரிமுத்து (தமிழ்நாடு அரசின் தூய தமிழ்ப்பற்றாளர் விருதாளர்) ப
7. காப்பியங்களில் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்.,புலவர்.சி.வசந்தா.,ஸ்ரீ வித்யா பதிப்பகம் சென்னை 2.,முதல் பதிப்பு டிசம்பர் 2001.,ப 21.
8. பெரியாரிய நோக்கில் மு.வ.,அறவேந்தன் .,உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் தொழில்நுட்ப வளாகம் தரமணி சென்னை 12.,முதல் பதிப்பு 2012.,ப 29.
9. நதிக்கரை மீன்கள்.,சிவ செல்வ மாரிமுத்து (தமிழ்நாடு அரசின் தூய தமிழ்ப்பற்றாளர் விருதாளர்)
10. குமரேசன் சதகம்.,ஜமதக்கனி நாயக்கர்.,ரத்தின நாயக்கர் அண்டு சன்ஸ்.,சென்னை 12.,முதல் பதிப்பு 1937.,ப70.
11. நதிக்கரை மீன்கள்.,சிவ செல்வ மாரிமுத்து (தமிழ்நாடு அரசின் தூய தமிழ்ப்பற்றாளர் விருதாளர்) ப 25
12. மேலது., ப 39

## துணைநூற் பட்டியல் (References)

1. முதன்மை ஆதாரம்
2. சிவ செல்வ மாரிமுத்து நதிக்கரை மீன்கள்.,
3. முத்துமோகன் பதிப்பகம் நெல்லை
4. முதல் பதிப்பு 2025
5. துணைமை ஆதாரங்கள்
6. ------------ திருக்குறள் எளிய உரை
7. மாணவர் மன்றம்
8. சென்னை 12.
9. முதல் பதிப்பு 1960.,
10. பேரா.வையாபுரிப்பிள்ளை தமிழர் பண்பாடு
11. தமிழ்ப்புத்தகாலையம் சென்னை 5.,
12. முதல் பதிப்பு 1949.
13. திரு. வி. க உள்ளொளி
14. சாது அச்சுகூடம் ராயப்பேட்டை சென்னை.
15. முதல் பதிப்பு 1945
16. தொல்காப்பியர் தொல்காப்பியம்
17. பொருளதிகாரம்.
18. கல்விக்கடல் அச்சுக்கூடம்.
19. முதல் பதிப்பு 1847
20. புலவர்.சி.வசந்தா காப்பியங்களில்
21. பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்.,
22. ஸ்ரீ வித்யா பதிப்பகம் சென்னை 2
23. முதல் பதிப்பு டிசம்பர் 2001
24. அறவேந்தன் பெரியாரிய நோக்கில் மு.வ
25. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
26. தொழில்நுட்ப வளாகம் தரமணி சென்னை 12.
27. முதல் பதிப்பு 2012
28. ஜமதக்கனி நாயக்கர் குமரேசன் சதகம்
29. ரத்தின நாயக்கர் அண்டு சன்ஸ்.,சென்னை12
30. முதல் பதிப்பு 1937

© 2026 இராஜன் ஜான் அ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..